# உலக அமைதி - இந்தியாவின் பொறுப்பு

*யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி*

உயிரினங்கள் எல்லாவற்றிலும் மனிதனே சிறந்தவன். பிறர்படும் துன்பத்தைக் கூர்ந்துணரும் நுண்ணறிவு மனிதனுக்கே சிறப்பாக அமைந்துள்ளது. வருந்துவோர்களிடம் இரக்கம் கொண்டு உதவி வாழும் தகைமை மனிதனுக்கே உண்டு. வாழ்க்கைக்குத் தேவையான பொருட்கள் பல, எனினும் அவற்றை விரைவாகவும், எளிதாகவும் பெருத்த அளவிலும், உற்பத்தி செய்துகொள்ள ஏற்ற இயந்திர விஞ்ஞான அறிவிலும் நாளுக்கு நாள் மனிதன் முன்னேறிக் கொண்டு வருகிறான். எனினும் மனித சமுதாயத்தில் ஏன் அமைதி இல்லை? மனிதரிடையே அச்சம், பிணக்கு, பகை, போர் இவை ஏன் அடிக்கடி ஆங்காங்கு எழுகின்றன. வாழ்வைச் சீர்குலையச் செய்கின்றன? மனித இன வாழ்வின் பெருநிதியான அமைதி குலைந்து மன இயல்பையும் விளைவுகளையும் அடிப்படையாகக் கொண்டு சிந்தித்தே இதற்கு முடிவு காண வேண்டும். சிந்திப்போம்.

மனிதனுடைய தேவைகள் நான்கு விதமானவை அவை,

(1) உணவு, உடை, உறைவிடம், பருவத்தே பால் உறவு இவை காலத்தோடும் தேவை நிறைவு பெறும் அளவிலும் கிடைக்க வேண்டும்.

(2) பலவாறாக அமைந்த இயற்கை அழகுகளையும் காட்சிகளையும் கண்டுகளிக்கும் வாய்ப்பு வேண்டும்.

(3) இயற்கை இரகசியங்களை அறியவும் பறர்க்கு உணர்த்தவும் வாய்ப்பும் சூழ்நிலையும் வேண்டும்.

(4) பிரபஞ்ச இயக்கத்திற்கும் தனக்கும் மூல ஆற்றலை அறிய வாய்ப்பும் உதவியும் வேண்டும்.

காலத்தோடும் முறையோடும் தேவைக்கேற்ப இந்நான்கு வகையும் மனிதனுக்கு கிட்டாதபோது அவன் அறிவு, உடல் ஆற்றல்கள் இவை திசைமாற்றம் பெறுகின்றன. போட்டியுணர்வும், பாதுகாப்புப் பொறுப்பும் மிகுதியாகின்றன, அச்சம், பகை, பணக்கு போர் இவையாக உருப்பெறுகின்றன. இத்தேவைகளுக்குரிய பொருட்களையும் வசதிகளையும் ஈட்டவும், காக்கவும், துய்க்கவும் பறர்க்கு உதவவும் உலகில் பறந்த எல்லோருக்கும் உரிமையுண்டு. இதுவே பிறப்புரிமை எனப்படும். இந்த உரிமையை பிறர் தடுக்காமலும் பறிக்காமலும் காப்பதற்கு அமையும் சமுதாய பாதுகாப்புச் சூழ்நிலையே சுதந்திரம் ஆகும். உலகில் வாழும் மக்கள் எல்லோருக்கும் இந்தத் தெய்வீகமான பிறப்புரிமையும் சுதந்திரமும் கிடைத்தால்தான், உறுதி செய்யப்பட்டால்தான், மனிதனுடைய வாழ்வில் அமைதி கிட்டும். அந்த அமைதியானது நிலைக்கவும் முடியும்.

மனித இன வாழ்விற்கே இன்றியமையாத இந்தப் பிறப்புரிமையையும் சுதந்திரத்தையும் காப்பதற்கு ஆதிகால மனிதன் முதல் அணுசக்தி கால மனிதன் வரையில் முயன்று கொண்டிருக்கின்றார்கள். இதனால் குடும்பம், ஊர், தொழில், மொழி, மதம், நாடு என்ற அடிப்படையில் மனித சமுதாயத்தில் குழு அமைப்புகள் (Group – Formations) ஒன்றின் மேல் ஒன்றாக உருவாயின. ஆட்சி முறையால் மனிதன் பிறப்புரிமையும் சுதந்திரமும் பெற எல்லா நாடுகளிலும் முயற்சி ஓங்கி வருகின்றது. ஒரு நாட்டு ஆட்சி எல்லைக்குள் மக்களிடையே எழும் பிணக்குகளைக் களையவும், போர் எழாமல் காக்கவும், இதுவரையில் மனித முயற்சி ஓரளவில் வெற்றி பெற்றுவிட்டது. எனினும் ஒரு நாட்டை மற்றொரு நாடு தாக்காமலிருக்க ஒரு உறுதியான நிரந்தர ஏற்பாடுதான் இன்னும் அமையவில்லை. அதுவரையில் நிரந்தரமான போர் ஓய்விற்கு வழியே இல்லை. மனித சமுதாயத்திற்கு முழு அமைதி கிட்டவும் முடியாது. **எனவே ஒரு நாட்டை மற்றொரு நாடு தாக்க**

**முடியாதபடி உலக நாடுகள் அனைத்தும் கூடி உலகப்பேரரசு அமைத்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகிவிட்டது.** இத்தகைய புனிதமான மனித குலப் பாதுகாப்பும் பேரவை மூலம்தான் ஒவ்வொரு நாட்டிலும் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமையும் சுதந்திரமும் கிட்டச் செய்யமுடியும், அமைதிகாக்க முடியும்.

## ஐ.நா. சபை

உலக நாடுகளிடையே போர் எழாமல் இருக்கவும், அப்படி மீறி வந்துவிட்டாலும் முன்னின்று நிலவச் செய்யவும் ஐக்கிய நாடுகள் சபை (United Nations Organisation) என்ற நிறுவனம் ஒன்று இன்று இருந்து வருகிறது. எனினும் அதனால் நிலையான அமைதியை உருவாக்க முடியாது, காக்கவும் முடியாது. ஏனெனில் அதன் பொறுப்புக்கேற்றபடி அமைப்பு முறை இல்லை. அதன் அமைப்பு முறையில் நான்கு குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உள்ளன. அவை,

(1) உலகிலுள்ள எல்லா நாடுகளும் அதில் உறுப்பினர்களாக இல்லை. இதனால் உலக மக்கள் அனைவரும் இதனை ஒரு பொது நிறுவனமாகக் கொள்ள முடியாது. இந்த அமைப்பிற்கு வெளியே இருக்கும் நாடுகள் செய்யும் தவறுகளைத் தடுக்கவோ, திருத்தவோ ஐ.நா. சபையால் முடியாது.

(2) ஒவ்வொரு நாட்டின் மக்கள் தொகைக்கேற்ற பிரதிநிதித்துவ உரிமை அச்சபையில் இல்லை. இதனால் ஐக்கிய நாடுகள் சபை ஒரு உலகப் பொது ஜனநாயக மன்றமாகத் திகழமுடியாது.

(3) ஐக்கியநாடு சபையில் உள்ள நாடுகளில் ஐந்து நாடுகளுக்கு மாத்திரம் ரத்து அதிகார உரிமை (Power of Veto) அளிக்கப்பெற்றிருக்கிறது எனவே, அந்தச் சபை இந்த ஐந்து நாடுகளில் தனிப்பட்ட கூட்டு நிறுவனமாகவே கருத இடமளித்துவிட்டது. இந்நாடுகளுக்கு அஞ்சியும், ஒதுங்கியும், ஒத்துப்போயும்தான் அதன் மற்ற உறுப்பினர் நாடுகள் வாழ வேண்டும்.

(4) அதிகாரப்பூர்வமான அமைதிப்படை ஐ.நா. சபைக்கென இல்லை. மேலும் இந்நிறுவனத்தைச் சேர்ந்த எந்த நாடும் தன்விருப்பம் போல் படைகளையும் போர்ச்சாதனங்களையும் பெருக்கிக் கொள்வதைத் தடுக்க முடியாமல் இருக்கின்றது.

இந்த நான்கு குறைபாடுகளையும் நீக்கி ஐ.நா. சபையை ஒரு உறுதியான உலகப் பாதுகாப்பு நிறுவனமாகச் செய்ய வேண்டும், மனித குலத்திற்கே நம்பிக்கை ஒளி தந்து கொண்டிருக்கும் ஐ.நா. நிறுவனம் திருத்தி அமைக்கப் பெற்று வலுப்பெறச் செய்ய வேண்டும். அதன் மூலம் அது ஒரு உலகப் பொதுச் சட்ட மன்றமாகத் திகழும். அதுவே ஒரு உலகப் பேரரசாகவும் (World Federal Government) அமைந்துவிடும். அதன் மூலம் கீழ்கண்டபடி பத்து அடிப்படைப் பொறுப்புகளை ஏற்கும் ஒரு உலக மக்கள் உரிமைச் சாசனம் இயற்றப் பெற வேண்டும்.

அவையாவன **:**

(1) உலகில் பிறந்து வாழும் எல்லா மக்களுக்கும் சம உரிமையும், சம பிரதிநிதித்துவமும் அளிக்கத் தக்க முறையில் எல்லா நாடுகளையும் இணைத்த, எல்லா நாட்டு ஆட்சிக்கும் மேலாதிக்கம் உடைய ஒரு உலகப் பேரரசு ஜனநாயக முறையில் அமைக்கப்பட வேண்டும், செயல்புரிய வேண்டும்.

(2) ஒரு கோடி மக்களுக்கு ஒரு பிரதிநிதி விகிதம் அந்தந்த நாட்டு அரசாங்கத்தின் மூலம் - தேர்தல் மூலமோ, நியமன மூலமோ - தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களைக் கொண்டு உலகப் பொது ஜனநாயக சட்டமன்றம் அமைக்க வேண்டும். அது மனித உரிமையினையும் சுதந்திரத்தையும் காக்க ஏற்ற சட்டங்களை அவ்வப்போது இயற்றிப் பணிபுரியும். இந்தச் சட்டமன்றம் உலகப் பேரறிஞர்களையும், நிபுணர்களையும் தேவையான எண்ணிக்கையில் கூட்டி ஒரு ஆட்சி

மன்றம் அமைக்கும். உலகப் பேரரசாக சட்டமன்றத்தில் மேற்பார்வைக்கு உட்பட்டு அதன் சட்ட திட்டங்களை அமுல் நடத்தும். இந்த ஆட்சிமன்றத்தைக் கண்காணிக்கவோ, திருத்தவோ, மாற்றவோ, புதுப்பிக்கவோ, கலைக்கவோ உலக ஜனநாயக சட்ட மன்றத்திற்கே உரிமையுண்டு.

(3) **எல்லோருடைய பிறப்புரிமையும் சுதந்திரமும் ஒரு தனி மனிதனாலோ, ஒரு குழுவினராலோ, ஒரு நாட்டு ஆட்சியாலோ, பறிக்கப்படாமலும், தடுக்கப்படாமலும் இந்த உலகப் பேரரசு பாதுகாக்கப் பொறுப்பேற்றுக் கொள்ளும்.**

(4) உணவு, உடை, வீடு, கல்வி, தொழில், திருமணம், ஆராய்ச்சி வாய்ப்பு இவற்றை ஒவ்வொரு அரசாங்கமும் அதன் கீழ் இருக்கும் குடிமக்கள் பெற வசதியைச் செய்யும்.

(5) ஆண்களைப் போல் பெண்களுக்கும் எல்லாத் துறைகளிலும் சம உரிமை அளிக்கப்படும். மேலும் இயற்கையாக பெண்பாலுக்கென அமைந்த உடலமைப்புக்கு ஒத்த அவசியமான வசதிகளும் அளிக்கப்படும்.

(6) மக்கள் சமுதாயத்தில் ஒரு கோடி மக்களைக் கொண்ட குழுவினரோ ஒரு பிரதேசவாசிகளோ அல்லது ஒரு நாட்டவரோ விரும்பினால், அவர்கள் விருப்பம்போல் தனியாக ஆட்சி எல்லையை வகுத்துக் கொண்டு உலக ஆட்சிக்கும் அந்நாட்டு சமஷ்டி ஆட்சிக்கும் உட்பட்டும் மனித உரிமைச் சாசனத்தை மதித்தும் வாழ உரிமை உண்டு.

(7) உலக மக்கள் எல்லோருக்கும் உலகனைத்தும் சொந்தம். எந்த நாட்டிலும் எந்த இடத்திலும் எவரும் குடியேறவோ, பிரயாணம் செய்யவோ, சம உரிமை உண்டு. மக்கள் உடல்நலம், இனிய வாழ்வு இவற்றிற்காக உலக அரசாங்கம் தான் இந்தத் துறையில் கட்டுப்பாடுகளை விதிக்கலாம்.

**(8) உலகில் எந்த அரசாங்கமோ தனது கடமைகளை நிறைவேற்றத் தவறினாலும், தகுதியற்று இருந்தாலும், அந்தப் பிரதேசத்தை உலக ஆட்சி கைப்பற்றி மக்களை தகுதியுடையவர்களாக்கி பின்னர் ஆட்சியை அந்நாட்டு மக்களிடம் ஒப்புவிக்கும்.**

(9) போர் சட்ட விரோதமாக்கப்படும் போர் அணிகள், போர்க் கருவிகளை உற்பத்திச் செய்யும் தொழிற்சாலைகள், விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்கள் உலகில் எங்கிருந்தாலும் அவை ஆட்சி நிர்வாகத்தின் கீழ் வந்துவிடும். இவற்றை ஆக்கத் துறைக்காகவும், கீழ் தங்கிய நாடுகளையும் மக்களையும் முன்னேற்றுவதற்காகவும், அகில உலகத்தரசு திட்டமிட்டுப் பயன்படுத்தும்.

(10) உலக ஆட்சியின் கீழ் அகில உலகப் பேரறிஞர்களைக் கொண்ட ஒரு தொண்டு நிலையம் அமைக்கப்படும். அது அவ்வப்போது மனித இன வாழ்வின் உயர்வுக்கான திட்டங்களை வகுத்துக் கொடுக்கவும், மக்களுக்குத் தொண்டாற்றவும் ஒரு பொது சமுதாய சீர்திருத்த இணைப்பு நிலையமாகப் பணிபுரியும், ஆன்மீகப் பொருளாதாரம், சுகாதாரம், விஞ்ஞானம், அரசியல் என்ற ஐவகையும் இணைந்து அறிஞர்களும் நிபுணர்களும் கூடிய ஆராய்ச்சிக் குழுவினரால் மக்கள் வாழ்வு அவ்வப்போது சீர்திருத்த ஏற்ற வழிகளை வகுத்துக் காட்டும்.

இவையே உலகப் பொதுவான மக்கள் உரிமைச் சாசனத்தில் உட்கருத்தாக அமைய வேண்டும்.

உலகப் பெருமக்களே விழிப்போடு சிந்தனை செய்யுங்கள், செயலாற்ற முயலுங்கள். நாம் மேலே காட்டிய வழியில் ஜனநாயக முறையில் ஒரு உலகப் பேரரசு அமைக்கத் தவறினாலும், தாமதித்தாலும் அது வேறு ஏதேனும் ஒரு வழியில் வந்தே தீரும். கடந்த கால உலக அரசியல் நிலைமைகளைப் பற்றி ஆராய்ந்து பாருங்கள், அச்சத்தாலும் வன்முறையாலும் ஒரு நாடு மற்றொன்றோடு

இணைக்கப்பட்டுக் கொண்டே வருகின்றது. அந்த முறையிலே உலகப் பேரரசு அமைவது மனித உலகத்திற்கு நல்லதல்ல. பொதுவுடைமைக் கொள்கை, முதலாளி ஆதிக்கக் கொள்கை (Communism and Capitalism) என இரண்டு பரிவில் ஏதேனும் ஒன்று தனது வலுவையும் சூழ்நிலைகளையும் பயன்படுத்தி உலக ஆட்சியை அமைத்தே தீரும். அப்படி அமைந்தால், அது வன்முறையும் அடிமைத்தனமும் கொண்டதாகவே இருக்க முடியும். மீண்டும் பின்விளைவாகப் பல குழப்பங்கள் விளைய வழியேற்பட்டு விடும்.

இத்தகைய விரும்பத்தகாத நிலைமை ஏற்படக்கூடாது. அன்பு நெறியில் உலகம் வாழ வேண்டும். மக்கள் அனைவரும் அமைதியாகவும் இன்பமாகவும் வாழ வேண்டும் என்று விரும்பும் அறிஞர்கள் எல்லோரும் ஒரு உலகப் பொதுச் சங்கமாகக் கூடிச் செயலாற்ற வேண்டும்.

வாழ்க்கை விளக்கங்களை மக்களுக்குச் சிந்தனை மூலம் அளித்து உயர்தரமான முறையில் உலக நட்பு உருவாகி நீடித்து வர வேண்டுமெனில் ஜனநாயக முறையில் உலக ஆட்சி அவசியம் என்ற கருத்தை சிந்திக்கும் ஆற்றலுள்ள எல்லாருடைய மனத்திலும் இடம் பெறச் செய்ய வேண்டியது முதல்பணி. பின்னர் அது அமுலுக்கு வரத்தக்க முறையில் திட்டமிட்டுச் செயலாற்றலாம். அன்பு முறையிலே ஆன்மீக நெறியிலே உலகம் திருத்த வேண்டும். மனிதகுலம் இன்பமும், அமைதியும் கொண்டு வாழவேண்டும். இந்தக் குறிக்கோளினைக் கொண்டு தொண்டாற்றுவோம்.

## இந்தியா வழிகாட்ட வேண்டும்

உலகப் பேரரசு மூலம் உலக அமைதியைக் காக்க வேண்டுமென்பது மனித குலத்திற்குப் பொதுவான திட்டம். இது ஒரு மாபெரும் திட்டம். இந்த திட்டத்தை உலகுக்கு அறிவிக்க யார் முதலில் முயற்சி எடுப்பது இந்த வினாவிற்கும் விடை காண வேண்டும்.

தொன்று தொட்டு இந்திய நாடு ஆன்மீகத் துறையில் பண்பட்ட ஒன்று. மனித இனம் ஒரு குலம் என்றும் எல்லோரும் உலகத் தோழமை பூண்டு, ஒத்தும் உதவியும் வாழ வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையிலும் இந்நாட்டு மக்கள் பண்பாடு உருவாகியுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியாவும் ஒரு உறுப்பு. எனவே இந்திய நாடுதான் இந்தத் திட்டத்தை முதலில் உலக நாடுகள் முன் வைக்க வேண்டும். படிப்படியாகப் பல நாடுகளின் ஆதரவும் இந்தத் திட்டத்திற்கு கிடைக்கும் என்பது திண்ணம்.

**இந்திய நாட்டு அரசாங்கம் வெளிநாட்டு அமைச்சகத்தில் உலக அமைதி திட்டத்திற்கென ஒரு பிரிவை ஏற்படுத்த வேண்டும்.** உலகப் பேரறிஞர்களைக் கொண்ட ஒரு மாநாடு கூட்டி அவர்கள் கருத்துக்களையும் திரட்டி இத்திட்டத்திற்குச் சரியான வடிவம் கொடுத்து அமைதியைக் காக்க முயல வேண்டும். இந்திய நாட்டு மாநில அரசுகளும் சிந்தனையாளர்களும், மத்திய அரசுக்குப் போதிய ஊக்கமளித்து உலக அமைதி திட்டம் அனைத்துலக மக்கள் கருத்தையும் கவரும் விதத்தில் ஒத்துழைக்க வேண்டிக்கொள்கிறேன்.

*(உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனது பிறப்புரிமை பாதுகாக்கப்படவும், உலக சமாதானம் உருவாவதற்குமான அடிப்படை கருத்துக்களை மகரிஷி அவர்கள் 1969-70 ஆண்டிலேயே வெளியிட்டார்கள். அந்தக் கருத்துக்களின் தொகுப்பே இக்கட்டுரையாகும். திட்டத்தை ஆழ்ந்து பரிசீலித்து ஆங்காங்குள்ள மன்றங்கள் கருத்தரங்கம் நடத்தலாம்.)*